12. **தங்கும் அறைக்கு உணவு எடுத்துச் செல்லலாகாது.**

13. மாணவியர் விடுதிச் சமையலறைக்குள் செல்லலாகாது. அங்குப் பணிபுரியும் நபர்களிடமும் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது.

14. உணவுக்கூடம் (Dining Hall) நெறிமுறைகளை தவறாது கடைப்பிடிக்க வேண்டும்.

15. மாணவியரைப் பார்க்க **பெற்றோரும், சகோதரிகளும் மட்டுமே அனுமதிக்கப்படுவர். சகோதரர்கள் அல்லது உறவினர்களோ பார்வையாளர்களோ வர அனுமதி இல்லை.**

16. முதல்வர் மற்றும் விடுதிக் கண்காணிப்பாளர் ஆகியோரின் அனுமதிபெற்ற பின்னரே மாணவியர் பார்வையாளரைச் சந்திக்க வேண்டும்.

17. ஒவ்வொரு மாதமும் இரண்டாம் மற்றும் நான்காம் ஞாயிறு மட்டுமே பார்வையாளர்கள் தினமாகும். பிற நாட்களில் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். பார்வையாளர்கள் நேரம் காலை 11.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை. அடையாள அட்டை அவசியம்.

18. செமஸ்டர் விடுமுறைக்கு வீட்டிற்குச் செல்லும் மாணவியர் கல்லூரி திறப்பதற்கு முந்தையநாள் மாலை 4.15க்கு விடுதிக்கு வந்துவிடவேண்டும். **சிறு விடுமுறைக்குச் செல்லும்போது கல்லூரி திறக்கும் நாளன்று காலை 8.30 மணிக்குள் வந்துவிட வேண்டும்.**

19. விடுமுறையின் போது பெற்றோர் மட்டுமே வந்து அழைத்துச் செல்லவும், கொண்டுவந்து விடவும் வேண்டும்.

20. 2ம், 4ம் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் வெகுதொலைவில் இருந்து வந்திருக்கும் மாணவிகட்குப் பார்வையாளர்கள் வராதபட்சத்தில் போன் வீட்டிலிருந்து வந்தால் பேச அனுமதி உண்டு. நேரம் காலை 11.00 மணி முதல் 1.00 மணி வரை. மாலை 3.00 மணி முதல் 4.00 மணி வரை

21. மாணவியருக்கு வரும் கடிதங்களும், மாணவியர் எழுதும் கடிதங்களும் விடுதிக் கண்காணிப்பாளரின் பார்வைக்கு வந்தபின்பே கொடுக்க அல்லது அனுப்பப்படும்.

22. ஒரு மாணவிக்கு வரும் பார்வையாளரை அவளுடைய தோழிகளோ, பிற மாணவியரோ சென்று பார்க்கக் கூடாது.

23. விடுதிக் கண்காணிப்பாளர் அனுமதியின்றி யாரும் கல்லூரிக்குச் செல்லாமல் விடுதியில் இருக்கக் கூடாது.

24. நோயுற்றபோது விடுதிக் கண்காணிப்பாளர் கையொப்பமிட்ட விடுப்புக் கடிதத்தைக் கல்லூரி முதல்வரிடம் கொடுத்த பின்பே விடுதியில் இருக்க அனுமதி உண்டு.

25. விடுதி மாணவியர், முதல்வரின் அனுமதியின்றித் தமக்குள் எக்காரணத்திற்காகவும் பணம் வசூலிக்கக்கூடாது.

26. உடன் பிறந்தோரின் திருமணம் தவிர வேறு எந்த வைபவங்களுக்கும் விடுமுறை அளிக்கப்பட மாட்டாது.

27. செமஸ்டர் விடுமுறை தவிர வேறு எந்த விடுமுறை நாட்களுக்கும் விடுதிக் கட்டணம் குறைக்கப்பட மாட்டாது.

28. **விடுதிக் கட்டணம் ஒவ்வொரு பருவத்தின் தொடக்கத்தில் செலுத்த வேண்டும்.**

29. விடுதிக் கட்டணத்தை டிமாண்ட் டிராப்ட் ஆகச் செலுத்தவேண்டும். டிமாண்ட் டிராப்ட்டை, ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம் திருநெல்வேலி என்ற பெயருக்கு எடுத்து அனுப்ப வேண்டும்.

30. டிமாண்ட் டிராப்ட் முதல்வர், ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி என்ற முகவரிக்கே அனுப்பப்பட வேண்டும். நேரடியாக மாணவி பெயருக்கு அனுப்பக்கூடாது.

31. மாணவிகளுக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பும் பெற்றோர், மாணவியரின் விடுதி எண், அறை எண், படிக்கும் வகுப்பு, முழு பெயர், யாரால் அனுப்பப்படுகிறது, பணம் அனுப்புபவரின் முழு விலாசம் இவற்றைத் தகவல் அளிக்கும் இடத்தில் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

Amirthalakshmi Printers, Tirunelveli Town, Cell : 98437 53665

# ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி விடுதி

(திருப்பராய்த்துறை, ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனத்தின் கிளை நிறுவனம்)
(மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)
(பல்கலைக்கழக மானியக் குழுவின் 2 (எஃப்) & 12 (பி) அங்கீகாரம் மற்றும்
தேசிய தர மதிப்பீட்டுக் குழுவின் மீள்மதிப்பீட்டில் 'ஏ' மதிப்பீடு பெற்றது)
சாரதா நகர், அரியகுளம், மகாராஜநகர் அஞ்சல், திருநெல்வேலி – 627 011.
Phone:0462-2520129, Mobile: 8903004534
Email:srisaradatvl@gmail.com Website:www.srisaradacollege.org



## விவரணம்

திருப்பராய்த்துறை ஸ்ரீராமகிருஷ்ண தபோவனத்தின் மேலாண்மையின் கீழ், ஸ்தாபகர் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்களின் கல்விக்கொள்கைகளின்படி திருநெல்வேலி ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி கடந்த 1986-ம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. வெளியூரிலிருந்து வரும் மாணவிகளின் வசதிக்காக விடுதி ஒன்றும் நடத்தப்படுகிறது. பண்டைய குருகுலக் கல்வி முறையை ஒட்டி மாணவியருக்கு வாழ்க்கைக்குரிய பண்பாட்டுப் பயிற்சியை அளிப்பது இவ்விடுதியின் சிறப்பு அம்சமாகும். தூய சத்துள்ள சைவ உணவு மாணவியருக்கு அளிக்கப்படுகிறது. கல்லூரியில் சேரும் மாணவியர் பெற்றோருடனோ, அல்லது தக்க பாதுகாவலருடனோ தங்க வசதி இல்லாவிடில் கல்லூரி விடுதியில்தான் தங்கவேண்டும். வேறு விடுதியில் தங்க அனுமதியில்லை. விடுதியில் தங்கும் மாணவியர் விடுதியின் நடைமுறைகளையும், விதிமுறைகளையும் தவறாது பின்பற்றக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

## (1) தினசரி நடைமுறை

| | | மணி முதல் | மணி வரை |
|---|---|---|---|
| துயில் எழுதல் | காலை | 4.30 | |
| காலைப் பிரார்த்தனை | ,, | 4.45 | 5.00 |
| சூரிய நமஸ்காரம் | ,, | 5.00 | 5.15 |
| நித்தியக் கடமைகள், படிப்பு, நீராடுதல் | ,, | 5.15 | 8.00 |
| காலைச் சிற்றுண்டி | ,, | 8.00 | 8.30 |
| காலை படிப்பு / நூலகம் | ,, | 8.30 | 9.15 |
| கல்லூரிக்குச் செல்லுதல் | ,, | 9.15 | |
| கல்லூரி வகுப்புகள் | ,, | 9.30 | 1.00 |
| மதிய உணவு | மதியம் | 1.00 | 1.45 |
| கல்லூரி வகுப்புகள் | ,, | 1.45 | 4.30 |
| மாலை சிற்றுண்டி | ,, | 5.00 | 5.30 |
| மாலை படிப்பு | ,, | 5.30 | 7.30 |
| மாலைப்பிராத்தனை, வாழி வகுப்பு | ,, | 7.30 | 8.00 |
| இரவு உணவு | இரவு | 8.00 | 8.30 |
| இரவு படிப்பு | ,, | 8.30 | 9.30 |
| விளக்குகளை அணைத்தல் துயில் கொள்ளுதல் | ,, | 9.30 | |

குறிப்பு : 9.30க்கு மேல் படிக்க தனி வசதி உண்டு. இரவு 9.30 முதல் காலை 4.30 வரை முழு அமைதி நேரம்.

## (2) விடுதி மாணவியர் வைத்திருக்கவேண்டிய பொருட்கள்

1. யூனிபார்ம் புடவை -2, சட்டை - 4, கலர்சேலை, பாவாடை, சட்டை, தாவணி தேவையான எண்ணிக்கை

☛ **நைட்டி, தாவணி இல்லாத பாவாடை சட்டை, சுடிதார் போன்ற உடைகளுக்கு அனுமதி இல்லை.**

2. விரிப்பு – 1, போர்வை – 1, தலையணை – 1 (மெத்தை வைத்திருக்கக்கூடாது)
3. தட்டு – 1, டம்ளர் – 1. வாளி – 1. கோப்பை – 1
4. சோப்பு, சீப்பு, கண்ணாடி போன்ற சாமான்கள்
5. துணி உலர்த்தக் கிளிப் 6 (குறைந்தபட்சம்)
6. வாட்டர் பேக் – 1, டிபன் பாக்ஸ் – 1
7. பூட்டுச்சாவியுடன் கூடிய பெட்டி – 1
8. கல்வி சார்ந்த புத்தகங்கள், எழுது பொருட்கள்

## (3) மாணவியருக்கான உரை

1. கல்லூரியும், விடுதியும் உனக்குச் சொந்தமான ஸ்தாபனங்கள்,
2. அவற்றைப் பாதுகாத்தல் உனது பொறுப்பு. அவற்றின் சுத்தமும் சீரிய சூழ்நிலையும் உனது கவனத்திற்குரிய விஷயங்கள்.
3. புத்தகப்படிப்பு முழுக் கல்வியாகாது. தினசரி வாழ்க்கையில் ஒவ்வொரு நிகழ்ச்சியும் கல்வி சம்பந்தப்பட்டதேயாம்.
4. அதிகாலை நேரம் பிரம்மமுகூர்த்தம் எனப்படும். அப்பொழுது தூங்குவது கூடாது. பகலில் தூங்குவது இளைஞருக்கு நல்லதாகாது.
5. காலையில் குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்வது ஆரோக்கியத்தை வளர்க்கும்.
6. உடையையும் படுக்கையையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். மிருதுவான படுக்கை நல்லதாகாது. அளவுக்கு மீறி உடைகளை வைத்துக்கொள்ள வேண்டாம்.
7. உனது பொருட்கள் கெட்டுப்போகாமல் பார்த்துக்கொள்வது உனது பொறுப்பு
8. சொந்தத் தேவைகளைச் சமூகத் தேவைகளுக்கு இணங்க அமைத்துக் கொள்வது சிறந்த குடிமைப் பயிற்சி.
9. இயற்கையின் இயக்கங்கள் யாவும் கட்டுப்பாட்டிற்கும், ஒழுக்கத்திற்கும் உட்பட்டே நடைபெறுகின்றன. நன்னெறியில் வரம்புக்கு உட்பட்ட வளர்ச்சியே முன்னேற்றமாகும்.
10. ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா விவேகானந்த அருள் வட்டத்தினுள் நீ வந்து சேர்ந்துள்ளாய். அதை ஒரு பெரும் பாக்கியமாகக் கருது. அந்த அருளைப் பெறுவதற்குத் தக்கதொரு பாத்திரமாக உன்னை அமைத்துக்கொள்.

## (4) விடுதி வசதிகள்

1. அமைதியான சூழ்நிலை, சுத்தமான காற்று, நீர், விசாலமானபாதுகாப்பான விடுதி, பசுமை வளாகம்
2. 24 மணி நேர மின் வசதி
3. நேவிடெல் ஸ்மார்ட் கார்டு டெலிபோன் வசதி
4. வளாகத்தினுள் வங்கி ATM
5. விடுதியினுள் இன்டர்நெட் வசதி
6. விடுதியினுள் தட்டச்சு பயிற்சி வகுப்பு
7. RO Water, River Water மற்றும் குளிர்/வெந்நீர் உபகரணம்
8. PAS, Newspaper corner, TV
9. விசாலமான கலையரங்கம் - படிப்பு, யோகாசனப் பயிற்சி
10. நீராவி முறை உணவு தயாரிப்பு
11. பெண் குழந்தைகளுக்கான அத்தியாவசியமான உணவு வகைகள்
12. Senior Students Supervision Support System
13. நிர்வாக அம்பாக்கள், சகோதரிகள் மற்றும் விடுதிப் பேராசிரியைகளின் 24 மணி நேர மேற்பார்வை

## (5) விடுதி விதிகள்

1. விடுதி மாணவிகள் அனைவரும் அதிகாலை 4.30 மணிக்கு எழுந்திருக்க வேண்டும்.
2. பிரார்த்தனை, படிப்பு, உணவு, கல்லூரி, ஓய்வு ஆகியவற்றிற்குக் குறித்த நேரத்தில் செல்ல வேண்டும். பிரார்த்தனைக்குச் செல்லும்போது பிரார்த்தனைப் புத்தகத்தை தவறாது எடுத்துச் செல்ல வேண்டும்.
3. மாணவிகள் 5 குழுக்களாகப் பிரிக்கப்படுவர். மலர்கொய்தல், கோயில் சுத்தம் செய்தல், காய்கறி நறுக்குதல், உணவு பரிமாறுதல், பூந்தோட்டவேலை ஆகிய பணிகளை முறையே செய்யவேண்டும்.
4. மாணவியர் தங்கும் அறை மற்றும் வராண்டா ஆகியவற்றைச் சுத்தம் செய்தல் அந்தந்த அறையில் தங்கும் மாணவியர் பொறுப்பாகும்.
5. அறையினுள் காலணிகளைப் பயன்படுத்தக் கூடாது. அவற்றை அறைக்கு வெளியே வரிசையாக விடவேண்டும்.
6. மாணவியர் தாம் தங்கியிருக்கும் அறை தவிர **மற்றவர்கள் அறைக்கு எக்காரணம் கொண்டும் கண்டிப்பாகச் செல்லக்கூடாது.**
7. வெளி மாணவிகள் (Dayscholars) மற்றும் **பார்வையாளர்களை அறைக்குள் அழைத்துச் செல்லலாகாது.**
8. அறைகளில் இரவு 9.30 மணிமுதல் காலை 4.30 மணி வரை கண்டிப்பாக விளக்குகள் அணைக்கப்பட்டு மௌனம் (அமைதி காப்பது மிகவும் அவசியம்.
9. மாணவியர் விலையுயர்ந்த நகைகள் (தங்கநகைகள்) அணியலாகாது. பெருந் தொகையையும் வைத்திருக்க வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.
10. மாணவியர் தம் உடைமைகளைப் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும். தொலைந்துபோகும் எந்த உடைமைகட்கும் நிர்வாகம் பொறுப்பு ஏற்றுக்கொள்ளாது.
11. மாணவியர் விடுதி அல்லது கல்லூரியைச் சார்ந்த யாரிடமும் கடன் வாங்கவோ, கொடுக்கவோ கூடாது.